ArivArk Daily One Topic Series / தினம் ஒரு தலைப்பு

# Reserve Bank of India
# இந்திய ரிசர்வ் வங்கி

**Prelims: Unit V Indian Economy, Banking / அலகு V இந்தியப் பொருளாதாரம்**

## What is a central bank? மைய வங்கி என்றால் என்ன?

"A central bank is the bank in any country to which has been entrusted the duty of regulating the volume of currency and credit in that country." (Bank for International Settlements)

"எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டின் பணப்புழக்கம் மற்றும் கடன் அளவைக் கட்டுப்படுத்தும் கடமை எந்த வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதுவே மைய வங்கி ஆகும்." (பன்னாட்டுத் தீர்வு வங்கி)

The Reserve Bank of India (RBI) is the central bank of India.

இந்திய ரிசர்வ் வங்கியே இந்தியாவின் மைய வங்கி.

## Origin of RBI: timeline ரிசர்வ் வங்கியின் தோற்றம்: காலவரிசை

| Year<br>ஆண்டு | Event<br>நிகழ்வு |
|---|---|
| **1926** | Hilton-Young Commission (Royal Commission on Indian Currency and Finance) recommends a central bank<br>ஹில்டன்-யங் ஆணையம் (இந்திய நாணய மற்றும் நிதியியல் இராயல் ஆணையம்) மைய வங்கியைப் பரிந்துரைத்தது |
| **1934** | Reserve Bank of India Act passed<br>இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் இயற்றப்பட்டது |
| **1 April 1935** | RBI starts working; share capital Rs. 5 crore (shares of Rs. 100), all with private shareholders; head office Calcutta<br>ரிசர்வ் வங்கி செயல்படத் தொடங்கியது; மூலதனம் Rs. 5 கோடி (Rs. 100 பங்குகள்), முழுவதும் தனியார் பங்குதாரர்கள் வசம்; தலைமை அலுவலகம் கொல்கத்தா |
| **1937** | Head office moves from Calcutta to Mumbai<br>தலைமை அலுவலகம் கொல்கத்தாவிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது |
| **1948** | Reserve Bank (Transfer to Public Ownership) Act<br>ரிசர்வ் வங்கி (பொது உரிமைக்கு மாற்றுதல்) சட்டம் |
| **1 January 1949** | RBI becomes a Government-owned central bank<br>ரிசர்வ் வங்கி அரசுக்குச் சொந்தமான மைய வங்கியானது |

**Extra fact:** RBI was the central bank of **Burma until 1947** and of **Pakistan until June 1948**.

ரிசர்வ் வங்கி 1947 வரை பர்மாவுக்கும், ஜூன் 1948 வரை பாகிஸ்தானுக்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

## Structure கட்டமைப்பு

| Item<br>அம்சம் | Detail<br>விவரம் |
|---|---|
| **Head office**<br>மத்தியத் தலைமையகம் | Mumbai (33 departments in 2017)<br>மும்பை (2017-ல் 33 துறைகள்) |
| **Zonal offices**<br>மண்டல அலுவலகங்கள் | 4: Mumbai, Delhi, Calcutta, Chennai<br>4: மும்பை, தில்லி, கொல்கத்தா, சென்னை |
| **Central Board**<br>மத்திய இயக்குநர் குழு | 21 members appointed by the Government of India: 1 Governor and 4 Deputy Governors (4 years), 10 directors, 2 Government officials, 4 directors from local boards<br>இந்திய அரசால் நியமிக்கப்படும் 21 உறுப்பினர்கள்: 1 ஆளுநர், 4 துணை ஆளுநர்கள் (4 ஆண்டுகள்), 10 இயக்குநர்கள், 2 அரசு அலுவலர்கள், உள்ளூர் வாரியங்களிலிருந்து 4 இயக்குநர்கள் |

Functions fall in three groups: **leadership and supervisory**, **traditional** and **promotional**.

பணிகள் மூன்று வகை: தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள், பாரம்பரியப் பணிகள், மேம்பாட்டுப் பணிகள்.

## Traditional functions பாரம்பரியப் பணிகள்

### 1. Banker and financial advisor to the Government அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகர்

- Keeps the accounts of the Central and State Governments, manages Government debt and issues new loans.
  மத்திய, மாநில அரசுகளின் கணக்குகளை நிர்வகிக்கிறது; அரசின் கடனை நிர்வகித்து புதிய கடன்களை வெளியிடுகிறது.
- Gives "ways and means advances" to Governments for temporary needs.
  தற்காலிகத் தேவைகளுக்காக அரசுகளுக்கு "வழிகளும் உபகரணங்களும்" முன்பணம் வழங்குகிறது.

### 2. Monopoly of note issue ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதில் முற்றுரிமை

- RBI prints and issues **all currency notes except the one rupee note**.
  ஒரு ரூபாய் நோட்டு தவிர அனைத்து ரூபாய் நோட்டுகளையும் அச்சிட்டு வெளியிடும் முழு அதிகாரம் ரிசர்வ் வங்கியிடம் உள்ளது.
- The **one rupee note and all coins** are issued by the **Ministry of Finance**.
  ஒரு ரூபாய் நோட்டு மற்றும் அனைத்து நாணயங்களையும் நிதி அமைச்சகம் வெளியிடுகிறது.
- Notes are printed at Nasik, Dewas, Salboni, Mysore and Hoshangabad (as listed in the book); never printed outside India.
  ரூபாய் நோட்டுகள் நாசிக், தேவாஸ், சால்போனி, மைசூர், ஹோஷங்காபாத் ஆகிய இடங்களில் அச்சிடப்படுகின்றன (பாடநூலின்படி); இந்தியாவிற்கு வெளியே அச்சிடப்படுவதில்லை.

### 3. Banker's bank வங்கியர்களின் வங்கியர்

- Keeps the current accounts of all commercial banks; every scheduled bank keeps a percentage of cash reserve with RBI.
  அனைத்து வணிக வங்கிகளின் நடப்புக் கணக்குகளை நிர்வகிக்கிறது; அட்டவணையிடப்பட்ட வங்கிகள் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ரொக்க இருப்பை ரிசர்வ் வங்கியில் வைக்க வேண்டும்.

### 4. Lender of last resort இறுதி நிலைக் கடன் ஈவோர்

- In an emergency, when every other source is exhausted, any bank can borrow from RBI.
  அவசர காலத்தில், பிற கடன் ஆதாரங்கள் தீர்ந்த நிலையில், எந்த வங்கியும் ரிசர்வ் வங்கியிடம் கடன் பெறலாம்.

### 5. Clearing house and custodian of reserves தீர்வக சேவை மற்றும் அந்நியச் செலாவணி இருப்பின் பாதுகாவலர்

- Runs the clearing system for banks: of 860 clearing houses, 14 are owned by RBI, 840 run by SBI and 6 by nationalised banks.

  வங்கிகளுக்கான தீர்வக முறையை நடத்துகிறது: மொத்தம் 860 தீர்வகங்களில் 14 ரிசர்வ் வங்கியிடம், 840 பாரத ஸ்டேட் வங்கி மூலம், 6 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம்.

- Keeps the reserves of gold and foreign currencies.

  தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணய இருப்புகளைப் பராமரிக்கிறது.

## Controller of credit: the tools கடன் கட்டுப்பாட்டாளர்: கருவிகள்

| Tool<br>கருவி | Meaning<br>பொருள் |
|---|---|
| **Bank rate**<br>வங்கி விகிதம் | Rate at which RBI rediscounts the bills of scheduled banks<br>அட்டவணையிடப்பட்ட வங்கிகளின் மாற்றுச்சீட்டுகளை ரிசர்வ் வங்கி மறு வட்டம் செய்யும் விகிதம் |
| **Repo rate**<br>மறு வாங்கல் விகிதம் | Rate at which RBI gives loans to banks against Government securities<br>அரசுப் பிணையங்களைப் பெற்றுக்கொண்டு ரிசர்வ் வங்கி வங்கிகளுக்குக் கடன் வழங்கும் வட்டி விகிதம் |
| **Reverse repo rate**<br>பின்னிட்டு மறு வாங்கல் விகிதம் | Rate at which RBI borrows from banks<br>ரிசர்வ் வங்கி வங்கிகளிடம் கடன் பெறும் வட்டி விகிதம் |
| **CRR (Cash Reserve Ratio)**<br>ரொக்க இருப்பு விகிதம் | Cash that banks keep WITH the RBI, as a ratio of their deposits<br>வங்கிகள் தங்கள் வைப்புகளின் விகிதத்தில் ரிசர்வ் வங்கியிடம் வைக்கும் ரொக்கம் |
| **SLR (Statutory Liquidity Ratio)**<br>சட்டரீதியான நீர்மைத்தன்மை விகிதம் | Money and money equivalents banks keep WITHIN themselves<br>வங்கிகள் தம்மிடமே வைத்திருக்க வேண்டிய பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவை |
| **Open market operations**<br>திறந்த சந்தை செயல்பாடுகள் | RBI buys or sells securities to change the money supply<br>பணப்புழக்கத்தை மாற்ற ரிசர்வ் வங்கி பிணையங்களை வாங்குகிறது அல்லது விற்கிறது |

An **increase** in the bank rate, CRR and SLR **reduces** the money in circulation, and a decrease raises it.

வங்கி விகிதம், CRR, SLR உயர்ந்தால் பணப்புழக்கம் குறையும்; குறைந்தால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

Qualitative tools (for particular sectors): rationing of credit, margin requirement, direct action, moral suasion.

தரம் சார்ந்த கருவிகள் (குறிப்பிட்ட துறைகளுக்கு): கடன் பங்கீடு, விளிம்புத் தேவைகள், நேரடி நடவடிக்கை, ஒழுக்க நடவடிக்கை.

**Also note:** 14 banks were nationalised in 1969 and 6 more in 1980.

கூடுதல் குறிப்பு: 1969-ல் 14 வங்கிகளும், 1980-ல் மேலும் 6 வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டன.

## Remember in one line ஒரே வரியில் நினைவில் கொள்ள

| Point<br>குறிப்பு | Key word<br>முக்கியச் சொல் |
|---|---|
| **Birth**<br>தோற்றம் | Hilton-Young 1926, Act 1934, starts 1 April 1935<br>ஹில்டன்-யங் 1926, சட்டம் 1934, தொடக்கம் 1 ஏப்ரல் 1935 |
| **Government owned**<br>அரசுடைமை | 1 January 1949; head office Mumbai since 1937<br>1 ஜனவரி 1949; 1937 முதல் தலைமையகம் மும்பை |
| **Notes**<br>நோட்டுகள் | All notes except Rs. 1; Rs. 1 note and coins by Ministry of Finance<br>Rs. 1 தவிர அனைத்து நோட்டுகளும்; Rs. 1 நோட்டு, நாணயங்கள் நிதி அமைச்சகம் |
| **CRR vs SLR**<br>CRR, SLR வேறுபாடு | CRR kept WITH RBI; SLR kept WITHIN the bank<br>CRR ரிசர்வ் வங்கியிடம்; SLR வங்கியிடமே |

## Practice MCQs பயிற்சி வினாக்கள்

### 1. The Reserve Bank of India started functioning on

இந்திய ரிசர்வ் வங்கி செயல்படத் தொடங்கிய நாள்

(A) 1 January 1949
1 ஜனவரி 1949

(B) 1 April 1935
1 ஏப்ரல் 1935

(C) 15 August 1947
15 ஆகஸ்ட் 1947

(D) 1 April 1937
1 ஏப்ரல் 1937

### 2. Which commission recommended a central bank for India in 1926?

1926-ல் இந்தியாவுக்கு மைய வங்கியைப் பரிந்துரைத்த ஆணையம் எது?

(A) Hilton-Young Commission
ஹில்டன்-யங் ஆணையம்

(B) Simon Commission
சைமன் ஆணையம்

(C) Narasimham Committee
நரசிம்மம் குழு

(D) Finance Commission
நிதி ஆணையம்

### 3. The one rupee note is issued by

ஒரு ரூபாய் நோட்டை வெளியிடுவது

(A) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

(B) State Bank of India
பாரத ஸ்டேட் வங்கி

(C) Ministry of Finance
நிதி அமைச்சகம்

(D) NABARD
நபார்டு

### 4. RBI became a Government-owned bank from

ரிசர்வ் வங்கி அரசுக்குச் சொந்தமான வங்கியான நாள்

(A) 1 April 1935
1 ஏப்ரல் 1935

(B) 1937

(C) 1 January 1949
1 ஜனவரி 1949

(D) 19 July 1969
19 ஜூலை 1969

**5. Cash kept by scheduled banks WITH the RBI as a ratio of their deposits is**

அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தங்கள் வைப்புகளின் விகிதத்தில் ரிசர்வ் வங்கியில் வைக்கும் ரொக்கம்

(A) SLR

(B) Repo rate
மறு வாங்கல் விகிதம்

(C) Bank rate
வங்கி விகிதம்

(D) CRR

**6. RBI is called the "lender of last resort" because**

ரிசர்வ் வங்கி "இறுதி நிலைக் கடன் ஈவோர்" எனப்படுவதற்குக் காரணம்

(A) It lends to farmers
விவசாயிகளுக்குக் கடன் தருகிறது

(B) It prints notes
நோட்டுகளை அச்சிடுகிறது

(C) Banks can borrow from it in an emergency
அவசர காலத்தில் வங்கிகள் அதனிடம் கடன் பெறலாம்

(D) It lends to foreign countries
வெளிநாடுகளுக்குக் கடன் தருகிறது

**7. Until when was RBI the central bank of Pakistan?**

ரிசர்வ் வங்கி எதுவரை பாகிஸ்தானின் மைய வங்கியாகச் செயல்பட்டது?

(A) June 1948
ஜூன் 1948

(B) August 1947
ஆகஸ்ட் 1947

(C) January 1949
ஜனவரி 1949

(D) March 1950
மார்ச் 1950

**8. An increase in CRR will**

ரொக்க இருப்பு விகிதம் (CRR) உயர்ந்தால்

(A) Increase money in circulation
பணப்புழக்கம் அதிகரிக்கும்

(B) Reduce money in circulation
பணப்புழக்கம் குறையும்

(C) Not change money supply
பண அளவில் மாற்றம் இல்லை

(D) Print more notes
அதிக நோட்டுகள் அச்சிடப்படும்

**Answer key / விடைகள்: 1 B, 2 A, 3 C, 4 C, 5 D, 6 C, 7 A, 8 B**

Source: 11th Commerce, Unit III Service Business I, Chapter 10 Reserve Bank of India, p.88 to 93.

ஆதாரம்: 11-ஆம் வகுப்பு வணிகவியல், அலகு III சேவைத் தொழில் I, பாடம் 10 இந்திய ரிசர்வ் வங்கி, பக்கம் 86 முதல் 91.